

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான், தமது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.3.2025) செக் குடியரசின் தலைநகரான பிராக்கில் பிப்ரவரி 26 முதல் மார்ச் 7 ந் தேதி வரை நடைபெற்ற 7வது பிராக் செஸ் திருவிழா 2025 ல் (The Prague Chess Festival2025) மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற கிராண்ட் மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பெற்றோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.3.2025) நுஞ்சாகு உபகரணத்தின் மூலம் 1 நிமிடத்தில் 159 முறை "Nunchaku Back Handrolls செய்து கின்னஸ் உலக சாதனை படைத்த செல்வி. ஜான்சி ராணி லட்சுமி பாய் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பயிற்சியாளர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2025) தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் சாதனைகளை படைத்து வரும் தடகள வீராங்கனை செல்வி, பி.எம். தபிதா அவர்களுக்கு, பயிற்சிக்கு தேவையான உபகர ணங்களை வாங்குவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2025) "Champions of Future" அகாடமியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பைக் பந்தய வீரர் செல்வன். ரெஹான் கான் ரஷீத்க்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 5.00 லட்சத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 11.03.2025 அன்று ஆய்வு மேற்கொண்டார். இதில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலயங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர்.கா. மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ‘தமிழ்நாடு சாம்பியன்’ அறக்கட்டளை நிதியின்கீழ்

# விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.5,50,000க்கான காசோலைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 14-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின் கீழ் விளையாட்டு வீரர், வீராங்கனை இரண்டு நபர்களுக்கு மொத்தம் ரூ.5,50,000 க்கான காசோலைகளை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2025) ‘Champions of Future’ அகாடமியால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பைக் பந்தய வீரர் செல்வன். ரெஹான் கான் ரஷீத்க்கு தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் 5.00 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் சாதனைகளை படைத்து வரும் தடகள வீராங்கனை செல்வி. பி.எம். தபிதா அவர்களுக்கு, பயிற்சிக்கு தேவையான சாதனங்களை வாங்குவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலம் ரூ. 50 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் செக் குடியரசின் தலைநகரான பிராக் (Prague) கில் பிப்ரவரி 26 முதல் மார்ச் 7 ந் தேதி வரை நடைபெற்ற 7 வது பிராக் செஸ் திருவிழா - 2025 ன் (The Prague Chess Festival - 2025) மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்ற கிராண்ட் மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் தனது பெற்றோருடன் துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். இதே நிகழ்வில், மாடம்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 ஆம் வகுப்பு பயின்று வரும் கராத்தே பயிற்சி பெற்ற மாணவி செல்வி. ஜான்சி ராணி லட்சுமி பாய் நுஞ்சாகு உபகரணத்தினை சுழற்றுவதன் மூலம் 1 நிமிடத்தில் 159 முறை ‘Nunchaku Back Handrolls’ செய்து ‘கின்னஸ் உலக சாதனை’ படைத்ததையொட்டி துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பெற்றோர், பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்: “தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்”

# பர்கூரில் ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. பிரமாண்டமான பொதுக்கூட்டம்!

## மதியழகன் தலைமையில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன உரை!

கிருஷ்ணகிரி, மார்ச் 14-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக பர்கூரில் ஒரே இலக்கு! “தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்” ஒன்றிய அரசை கண்டித்து பாராளுமன்ற தொகுதி மறு சீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டு அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் ஒன்றிய அரசின் செயலை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த பொதுக்கூட்டத்தில்

பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன் வரவேற்புரை ஆற்றினார்.

ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர், மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி, கோவிந்தன், தனசேகரன், எக்கூர்.செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், குண. வசந்தரசு, கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை, பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித், பேரூராட்சித் தலைவர் சந்தோஷ் குமார், பேரூராட்சி துணைத் தலைவர் லட்சுமி மனோகரன் , பேரூராட்சி அவைத்தலைவர் இளங்கோவன், பேரூர் கழக துணை செயலாளர்கள் மகேந்திரன், பொற்பதவல்லி கிருபாகரன், அனுராதா மகேந்திரன், பொருளாளர் வீரவேல், மாவட்ட பிரதிநிதிகள் கார்த்திகேயன், ஜான் ஜேசுதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செயலாளர், வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த கண்டண பொதுக் கூட்டத்தில் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், தலைமை கழக பேச்சாளர் பேர்ணாம்பட்டு ராஜேந்திரபிரசாத் ஆகியோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து கண்டன உரை ஆற்றினார்கள்.

இந்த பொதுக் கூட்ட த்தில் எழுச்சி உரையாற்றிய கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசும் போது தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை இருப்பதால் தான் தமிழகம் இந்த அளவில் வளர்ச்சி அடைந்து உள்ளது. அண்ணா உருவாக்கிய இரு மொழிக் கொள்கையால் தான் தமிழகத்தில் இத்தனை பேர் படித்து உள்ளனர். தமிழிசை என பெயர் வைத்துக்கொண்டு மும்மொழிக் கொள்கைக்கு தெரு தெருவாக கையெழுத்து வாங்குகிறார். சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் காங்கிரஸ் கொண்டு வந்தது. அதே போல் தமிழகத்தில் தமிழுக்கு போராடியவர்களுக்கு மருத்துவம் படிக்க சில இடங்களை ஒதுக்கினார். அதன்படி தமிழுக்கு போராடிய தமிழிசையின் தந்தைக்கு வழங்கப்பட்ட அந்த இட ஒதுக்கீட்டில் தான் தமிழிசை மருத்துவம் படித்தார்.

பிற்படுத்தப்பட்ட பிரிவினர் படித்து மருத்துவர் உள்ளிட்ட துறையில் முன்னேறியதால் பல்வேறு சமூகத்தினர் தங்களையும் பிற்படுத்தப்பட்ட பிரிவில் இனைத்துக்கொள்ளுமாறு கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கையை ஏற்று கலைஞர் பிற்படுத்தப்பட்ட பிரிவில் வெள்ளாள கவுண்டர் சமூகத்தை சேர்த்தார். ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழர்களை மிகவும் இழிவுபடுத்தி பேசுகிறார் இதனால் தமிழகத்தில் எழுந்த கண்டன குரலால் பயந்து போய் 100 முறை மன்னிப்பு கேட்கிறார் தர்மேந்திர பிரதான். கலைஞரை போல் முதல்வர் தளபதியும் பல்வேறு தலைவர்களை ஒன்றிணைக்கிறார். முதன் முதலில் தமிழர்களை கேவலமாக பேசியது அமித்ஷா தான். தமிழர்களின் அறிவை மோடி பயனடுத்தலாம், நவீன் பட்நாயக் பயனடுத்தினால் தவறா என கேள்வி எழுப்பினார். ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையை கண்டித்து அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ்,

மாநில விவசாய அணி துணை செயலாளர் வெங்கடேசன், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கிருபாகரன் ,செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நரசிம்மன், மற்றும் அன்பரசன் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் பூத் கமிட்டி சார்ந்த BLA 2, BLC, ஒருங்கிணைப்பாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் முடிவில் பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் நன்றி உரையாற்றினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் குளமங்கலம் ஊராட்சியில் அமைந்துள்ள "ஆசியாவிலேயே மிகப்பெரிய குதிரை சிலை கொண்ட புகழ்பெற்ற திருத்தலமான பெருங்காரையடி மீண்ட அய்யனார் கோவில் மாசிமக திருவிழாவினை முன்னிட்டு,கோயிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சுமதி மெய்யநாதன் ஆகியோர் அன்னதானம் வழங்கி சிறப்பித்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டம் சிக்கய்ய நாயக்கர் கல்லூரியில் உலக தரத்திலான விளையாட்டு மைதானம், நூலக வசதிகள் மற்றும் குடிமை பணிகள் தேர்வுக்கான பயிற்சி மையம் என்று அறிவித்ததை தொடர்ந்து இப்பணிகள் முன்னேற்றம் குறித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, உயர் கல்வி துறை அமைச்சர் கோ.வி.செழியன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்டக் கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், ஜெ.திருவாசகம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர். இரா. இராஜேந்திரன் தலைமை வகித்தார். கழக செய்தி தொடர்பு இணைச்செயலாளர். சிவ.ஜெயராஜ், தலைமைக் கழக பேச்சாளர். நாகம்மை கருப்பையா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், ஒன்றிய செயலாளர் ஒ எம். ரமேஷ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.